**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

O.S. No.64/2020

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 08 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 08.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராசு | ஜாதி | : | |
| த/பெயர் | : | நாரயணசாமி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி எனக்கு நெருங்கிய உறவினர் ஆவார். அவர் தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றாலும், தற்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார் என்றாலும் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். என்னால் கையொப்பம் செய்து தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான். எங்கு வைத்து விவரங்கள் சொன்னேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது குறித்து என்னால் சொல்லமுடியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை.

2. பிரதிவாதி வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே ஒரு பள்ளாங்கு தூரம் இருக்கும். தாவா சொத்து தென்னை தோப்பாக உள்ளது. எத்தனை தென்னை மரங்கள் உள்ளது என்றால் ஞாபகமில்லை. அதிலுள்ள தென்னை மரங்களை யார் வைத்தது என்றால் வாதியின் தகப்பரான என் அண்ணன் வைத்தார். அதன் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதியின் மாமனார் மாயக்கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும். அவர் கடந்த 20 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார்.பிரதிவாதியின் கணவர் கடந்த 16 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

3. பிரதிவாதி தாவா சொத்தை கடந்த 15 வருடத்திற்கு முன்பிலிருந்து ஆக்கிரமத்து வைத்துள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே பிரதிவாதியின் மாமானார் மாயக்கிருஷ்ணன் தாவா இடத்தை தென்னை மரங்களை வைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு தாவா சொத்து எப்படி சொந்தம் என்றால் ஏற்கனவே வாதியின் அப்பாவிற்கு சொந்தமாக இருந்து அதற்கு பின்பு அவரால் வாதிக்கு

எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனார் உயிருடன் உள்ளார். வாய் பேசமுடியாது. காது கேட்காது. நடமாட்டம் இல்லாமல் வீட்டில் தான் உள்ளார்.

4. தாவா சொத்தை வாதியின் தாய் மற்றும் தகப்பனார் பிரதிவாதியின் மாமனார் மாயக்கிருஷ்ணன் என்பவருக்கு வாய்மொழியாக அனுபவத்தை ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான சொத்தை பிரதிவாதியின் மகனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன். அதற்கு முன்பே வாய்மொழியாக பேசி தொகை பெற்று கொண்டு அதற்கு பின்னர் கிரையம் செய்துக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் எனது சொத்தை பிரதிவாதியின் மகனுக்கு கொடுப்பதாக எப்போது வாய்மொழியாக ஒப்புக்கொண்டேனா அப்போது தான் வாதியின் தகப்பனார் கலியபெருமாள் தாவா சொத்தை வாய்மொழியாக ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் வாய்மொழியாக ஒப்புக்கொண்டேன்.

5. எனக்கு சொந்தமான சொத்தும், மற்றும் தாவா சொத்தை நானும், வாதியின் தந்தையார் கலியபெருமாளும் கடந்த 20 வருடங்களுக்கு முன்பாகவே வாய்மொழியாக அனுபவத்தை ஒப்படைத்தோம் என்றாலும், அதை அனுசரித்து கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது அண்ணன் மகனான வாதி பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துவிட்டார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.08 19:16:15 +0530

District Munsif

Mannargudi.